பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 06 புதன்கிழமை 23.08.2023 கதிர் 285

### 6.2 மில்லியன் டொலர் பெறுமதியான

# 11 ராணுவ வாகனங்கள் சீனாவால் அன்பளிப்பு

### பதில் பாதுகாப்பு அமைச்சர் முன்பாக ஒப்படைப்பு

**6.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 11 விரைவாக பொருத்தப்பட்ட இராணுவ வாகனங்களை சீன தேசிய பாதுகாப்பு அமைச்சு இலங்கைக்கு வழங்கியுள்ளது.**

**இலங்கை, இராணுவத்தின் உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் விசேட கடமைகளுக்கு ஈடுபடுத்துவதற்காக இந்த வானகங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.**

**பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், சீன தேசிய பாதுகாப்பு அமைச்சின் அவசர கட்டளை மற்றும் தொடர்பாடல் அமைப்பு வாகனங்களை இராணுவத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் போது உத்தியோகபூர்வ ☞ 2**

## இது ரகசியம் அல்ல!

மடுத் திருவிழாவிற்கு வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு உரையாற்றும்போது வவுனியா மாவட்டம் நயினாமடுவில் அமையவுள்ள சீனித் தொழிற்சாலை குறித்தும் பேசினார். வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்துப் பேசும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதாவது வடக்கு மக்களுக்காகத் தனது ஆட்சியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி தொடர்பில் அவர் பெருமை பீற்றிக்கொண்டதாகவும் இதனைக் கொள்ளலாம். அப்போது அவர் மற்றொரு விடயத்தையும் குறிப்பிட்டுச் சொல்லத் தவளவில்லை. வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கோரிக்கையின் பெயரில்தான் இந்தச் சீனித்தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது என்றார் அவர். அதாவது அவரது ஆட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த அபிவிருத்தித் திட்டம் நாடாளுமன்ற உறுப்பினரின் யோசனையே என்பதை அவர் வெளிப்படுத்தினார்.

அவரது கருத்து வெளிப்பட்டதும் ரெலோவின் மத்திய குழு உறுப்பினரும் வடக்கு ☞ 2

## அப்புத்தளையில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் படுகொலை

பதுளை, அப்புத்தளை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கொழும்பு-அப்புத்தளை பிரதான பகுதியில் உள்ள ஹோட்டலுக்குள் குறித்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் அப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## மலையக மக்கள் உரிமைக்காக சிறீதரன் எம்.பியும் போராட்டம்



மாத்தளை, ரத்வத்த தோட்டத்தில் தமிழ்க் குடும்பம் ஒன்றின் தற்காலிக வீட்டை உடைத்துளறிந்து அங்கிருந்தவர்களை நடுத்தெருவில் நிறுத்திய தோட்ட உதவி முகாமையாளரின் செயற்பாட்டை எதிர்த்து நாடாளுமன்றத்தின் நடுவே நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறீதரனும் கலந்துகொண்டார். அவருடன் ☞ 2

## சரத் வீரசேகராவின் முழுமையான பேச்சு

'குருந்தூர்மலையில் கை வைப்பதை அடிப்படைவாதிகள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி குருந்தூர்மலையில் பௌத்தர்களுக்கு இடமளிக்கமாட்டார். ஆனால், தமிழர்கள் பொங்கல் பொங்குவதற்கு இடமளிப்பார். அவரால் சரியான தீர்மானத்தை எடுக்க முடியாது. ஆகவே, முல்லைத்தீவு நீதிமன்றத்துக்குப் பிறிதொரு நீதிபதி ஒருவரை நியமிக்குமாறு நீதி அமைச்சரிடமும், நீதிச் சேவை ஆணைக்குழுவிடமும் வலியுறுத்துகின்றேன்.'

இவ்வாறு முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான ரியல் அட்மிரல் சரத் வீர சேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொல்பொருள் கட்டளைச் சட்டத்துக்கு எதிராகவே முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி குருந்தூர்மலையில் பொங்கல் பொங்கும் இந்து மத வழிபாட்டில் ஈடுபட அனுமதி வழங்கியுள்ளார். தொல்பொருள் கட்டளைச் சட்டத்தில் 'பௌத்தர்களின் மனங்களைப் பாதிக்கும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக்கூடாது. அவ்வாறான செயற்பாடுகள் தண்டனைக்குரிய குற்றம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான தெளிவான கட்டளைச் சட்டங்கள் காணப்படுகின்ற நிலையில் நீதிபதி தவறான கட்டளைகளைப் ☞ 2

## சிங்கப்பூர் பிரதமருடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

சிங்கப்பூருக்கான இரு நாள் விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் இஸ்தானா மாளிகையில் இடம்பெற்றது.

சிங்கப்பூர் பிரதமரால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அன்பான வரவேற்பளிக்கப்பட்டது. இருநாட்டுதலைவர்களுக்கும் இடையிலான சிநேகபூர்வ பேச்சுக்களை தொடர்ந்து இருதரப்பு பேச்சு தொடங்கியது.

சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கு இடையில் காணப்படும் ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் தலைவர்கள் அவதானம் செலுத்தியிருந்ததோடு, பரந்த பொருளாதார ஒருமைப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது.

பெரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6இற்கு அமைய, காபன் சீராக்கல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பிரதமர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது. சிங்கப்பூர் வர்த்தக மற்றும் கைத்தொழில் நிரந்தரச் செயலாளர (அபிவிருத்தி) பெக் ஸ்வன் மற்றும் சிங்கப்பூருக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சசிகலா பிரேமவர்தன ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

பெரிஸ் ஒப்பந்தத்தின் பிரிவு 6 க்கு அமைய, சர்வதேச காபன் வணிகத்தின் கீழ் பசுமை வீட்டு ☞ 2

## அமைச்சர் தேவானந்தா இன்று சீனா புறப்பாடு

(ந.லோகதயாளன்.)

இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று அதிகாலை சினாவிற்குப் பயணமானார்.

இந்த மாதத் தொடக்கத்தில் இந்தியாவிற்கு ஒரு வார கால தனிப்பட்ட பயணம் மேற்கொண்ட அமைச்சர், இன்று அதிகாலை சினாவில் தரை இறங்கியுள்ளார்.

இதே நேரம் அமைச்சரின் சீனப் பயணம் தொடர்பில் அமைச்சோ அல்லது அரசோ எந்தவிதமான ☞ 10

## முதல் எட்டு மாதங்களில் 36 பேர் சுட்டுக் கொலை

இந்த ஆண்டு ஜனவரி முதல் இதுவரை நாடு முழுவதும் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் குறைந்தது 36 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 28 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் 60 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் அதிக எண்ணிக்கையிலானவை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு இடையிலான மோதல்களின் இடம்பெற்றவையாகும்.

எவ்வாறாயினும், சில துப்பாக்கிச் ☞ 2

## நீதிபதியினை விமர்சிக்கும் வீரசேகரவே மனநோயாளி

### கோவிந்தன் கருணாகரம் எம்.பி. காட்டம்

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியை கடும் வார்த்தைகொண்டு விமர்சிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரதான் ஓர் அரசியல் மனநோயாளி. இவரைப் போன்ற அரசியல் மனநோயாளிகள் நாடாளுமன்றத்தில் இருந்து மாத்திரமல்ல, இலங்கை அரசியலிலும் இருந்தும் முற்றாக நீக்கப்படவேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோவின் பொதுச்செயலாளருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர்.

அவருக்கு முன்பாக உரையாற்றிய சரத் வீரசேகர, குருந்தூர் ☞ 2

## 10 பேர்ச் காணி வழங்குவதே மலையக மக்களுக்குத் தீர்வு

### பெருந்தோட்டத்துறை அமைச்சர் தெரிவிப்பு

பெருந்தோட்டங்களில் ஏற்படும் பிரச்சினைகளை தடுப்பதற்கு அவர்களுக்கு 10 பேர்ச்காணியைச் சட்டரீதியான அனுமதியுடன் வழங்குவதே தீர்வாக அமையுமென பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

மாத்தளை, எல்கடுவ, ரத்வத்தை தோட்டத்தில் இடம்பெற்ற விவகாரம் தொடர்பில் ஆளும் தரப்பு எடுத்துள்ள நடவடிக்கை என்னவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் நேற்று சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாத்தளை, எல்கடுவ, ரத்வத்தை கீழ்பிரிவு தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்துக்கு முதலில் நாம் கவலையை ☞ 2

## தான்தோன்றித்தனமான தோட்ட அதிகாரிகள்: உடனடி நடவடிக்கைக்கு சபாநாயகர் அழுத்தம்

'எமது மாவட்டத்திலும் (மாத்தறை) தோட்டப் புறங்களில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. தோட்ட அதிகாரிகள் தான் தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார்கள். ஆகவே, இப்பிரச்சினைகள் குறித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுங்கள்.'

- இவ்வாறு சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்த்தன, பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் ரமேஷ் பதிரணவிடம் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று, மாத்தளை - ரத்வத்த தோட்டத்தில் தற்காலிக குடியிருப்பு ஒன்றை அந்தத் தோட்டத்தின் உதவி முகாமையாளர் பலவந்தமான முறையில் அகற்றிய சம்பவம் தொடர்பில் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ரமேஷ் பத்திரண விசேட உரையாற்றினார். அமைச்சரின் உரையைத் தொடர்ந்து சபாநாயகர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்தார்.

சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:-

'இவ்வாறான பிரச்சினைகள் எமது மாவட்டத்திலும் (மாத்தறை) இடம் பெறுகின்றன. தோட்ட அதிகாரிகள் தன்னிச்சையான முறையில் செயற்படுகின்றார்கள். அவர்கள் தோட்ட மக்களை இருக்கவிடுவதில்லை. மின்சாரம், நீர் உள்ளிட்ட வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அவர்கள் தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஆகவே, எமது மாவட்டத்தில் உள்ள தோட்டப்புற மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுங்கள்.'

- என்றார்.

## 'புஷ்பா' திரைப்படப் பாணியில் கடத்திய 600 கி. கஞ்சா சிக்கியது

### இலங்கைக்கு கொண்டுவரப்பட இருந்தது

(ந.லோகதயாளன்.)

இலங்கைக்கு கடத்தும் நோக்கில் புஷ்பா திரைப்பட பாணியில் பார ஊர்தியில இரகசிய அறை அமைத்து கடத்திய 600 கிலோ கஞ்சா நேற்று மாலை தமிழ்நாடு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே கயத்தாறு சுங்கச் சாவடிப்பகுதியில் புகையிலை மற்றும் கஞ்சா ஒழிப்பு தனிப்படை காவல்துறையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அவ்வழியாக வந்த பார ஊர்தியையும் நிறுத்தி சோதனை நடத்தினர்.

வாகனச் சாரதி முன்னுக்குப் பின் முரணான தகவல்களைக் கூறியதை அடுத்து தனிப்படை காவல் துறையினர் பார ஊர்தியைத் திறந்து சோதனையிட்டனர். உள்ளே இரகசிய அறை அமைத்து கஞ்சா கடத்தப்பட்டமை தெரியவந்தது.

300 பொதிகளில் கடத்தப்பட்ட 600 கிலோ ☞ 2

## இனி இது .....

மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான விந்தன் கனகரட்ணம் செய்தியாளர்களைச் சந்தித்து தனது கட்சித் தலைமையைக் கண்டித்துக் கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். தமிழ் மக்களுக்கு இப்போது தேவை உரிமையே தவிர சீனியோ சர்க்கரையோ அல்லவென்று அவர் கொந்தளித்திருந்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக அவரும் கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரெலோ கட்சிக்குள் குரல் எழுப்பியவேளை எல்லாம் தனக்கும் கட்சிக்கும் இந்த விடயத்தில் தொடர்புகள் ஏதும் இல்லை என்று தெரிவித்து வந்த கட்சித் தலைவர் செல்வம்தான் இந்த சீனித் தொழிற்சாலையின் மூளை என்பதை ஜனாதிபதி தனது வாயாலேயே உறுதிப்படுத்திய பின்னர், அதைப் பொறுக்க முடியாமல்தான் அவர் பொது வெளிக்கு வந்து தனது கட்சித் தலைமையின் செயலைக் கண்டித்தார்.

விந்தன் கட்சியின் மிக நீண்ட கால விசுவாசி. கட்சியிலிருந்து சிறீகாந்தா, சிவாஜிலிங்கம் போன்றோர் பிரிந்து சென்றபோதுகூட கட்சியோடு நின்றவர் மட்டுமல்லர் ஏனையவர்களும் கட்சியைவிட்டுப் பிரிந்து செல்லவிடாமல் கட்டிக்காத்தவர். விடுதலைப் புலிகளின் காலத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கட்சியின் மத்திய குழு உறுப்பினராக அவர் இருந்தபோதும் கட்சிக்குள் அவருக்கு எந்தப் பதவியும் கிடையாது. நேர்மையாக இருப்பதன் காரணமாகவும் பணபலம் இல்லாத காரணத்தாலும் பதவி ஏதும் அவருக்கு வழங்கப்படுவதில்லை என்றும் சொல்லலாம்.

அப்படிப்பட்ட நிலையிலும் கட்சித் தலைமை தவறிழைத்தது என்று தெரிந்ததும், உறுதியானதும் அதனை எதிர்த்துக் கேள்வி கேட்டார், மக்கள் அரங்கத்தின் முன்னால் நின்று கட்சியைக் கண்டித்தார். அவரது துணிபும் அர்ப்பணிப்பும் போற்றத்தக்கது. இதனால் கட்சிக்குள் தனக்கு இனிவரும் காலங்களிலும் பதவிகள் தரப்படாது ஓரங்கட்டப்படுவோம் என்பது தெரிந்தேதான் அவர் கட்சித் தலைமையின் தவறை எதிர்க்கத் துணிந்தார். மக்களுக்கான அர்ப்பணிப்பு மிக்க சேவையின் வெளிப்பாடு அது.

அவர் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதற்கு மற்றொரு காரணமும் இருக்கின்றது. வடக்கு மாகாண சபை ஆட்சியில் இருந்தபோது கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தை நிராகரித்தபோது அந்தச்சபையில் விந்தனும் ஓர் உறுப்பினராக இருந்துள்ளார். அதனால் இந்தத் திட்டம் வவுனியா மற்றும் வன்னி மக்களுக்குப் பாதகமானது என்பதை அவர் மிகநன்றாகப் புரிந்து வைத்திருந்தார். அதனாலேயே இந்தத் திட்டம் வேண்டாம் என்று கட்சித் தலைமையை எதிர்க்கின்றார்.

அதேநேரம், ரெலோ அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணி இந்தத் திட்டம் குறித்து இதுவரை வாயே திறக்கவில்லை. அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஈபிஆர்எல்எவ் கட்சி மட்டும் இந்தத் திட்டத்தை எதிர்த்து ஒரு பொதுவான அறிக்கையை வெளியிட்டது. இத்தகைய திட்டங்களால் சிங்கள் குடியேற்றங்கள் நிகழ்வதற்கான வாய்ப்புகளே அதிகம் என்று கண்டித்தது. அதன் பின்னர் அந்தக் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் செய்தியாளர்களிடம் பேசும்போது, இந்தத் திட்டத்திற்கும் ரெலோவுக்கும் உள்ள தொடர்பு தெளிவற்றது, அதனை அந்தக் கட்சிதான் தெளிவுபடுத்தவேண்டும் என்று சமாளித்தார். அதாவது கூட்டணி இது விடயத்தில் கருத்துச் சொல்வதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை என்பது அவரது வாதமாக இருந்தது.

கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ இதில் சம்பந்தப்பட்டிருக்கிறது என்கிற உறுதியான தகவல் இல்லாமல் அதனைக் கண்டிக்கவோ அது தொடர்பில் ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுக்கவோ கூட்டணிக்கு அவசியம் ஏற்படவில்லை என்பது அவரது கருத்தின் சாரம். இப்போது ரெலோ தலைவர் செல்வம் கேட்டுத்தான் சீனித் தொழிற்சாலையைக் கொண்டு வருவதாகவும், அதற்கான பணிகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் ஜனாதிபதியே பகிரங்கமாக வாக்குமூலம் அளித்துவிட்ட பின்னரும் ஜனநாயகக் கூட்டணி ஏன் இன்னும் இது விடயத்தில் அமைதி காக்கிறது?

தமிழ் மக்களுக்குப் பாதகமான, தமிழர்களின் விவசாயத்தை அழிக்கக் கூடிய, தமிழர்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கக்கூடிய இந்தத் திட்டத்தை - அது அவ்வளவு மோசான திட்டம் என்று தெரிந்தும் - எதிர்ப்பதற்கு ஜனநாயகக் கூட்டணி ஏன் முன்வரவில்லை? கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சி மற்றும் ஈபிஆர் எல்எவ் ஆகியன ஏற்கனவே இந்தத் திட்டத்தை ஆதரிக்கவில்லை என்று தமது தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துவிட்டன. வழக்கம் போல் புளொட் தனது கருத்து எதனையும் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை. என்றாலும், புளொட் தலைவர் சித்தார்த்தனும் இந்தத் திட்டத்தை ஆதரிக்கும் நிலையில் இல்லை என்பதை அறிய முடிகின்றது. அப்படியிருந்தும் கூட்டணி ஏன் இது தொடர்பில் தனது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை.

தமிழ் அரசியல்வாதிகளின் இத்தகைய அசமந்ததமும், சோம்பேறித்தனுமும்தான் கடந்த காலங்களிலும் தமிழர்களுக்குப் பாதகமாக அமைந்திருக்கின்றன. இந்தத் திட்டத்தை முளையிலேயே கிள்ளித் தடுத்து நிறுத்தவில்லை என்றால், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்-மல்வத்துஓயா தண்ணீர் வவுனியாவுக்கு வந்ததும் சிங்களக் குடியேற்றங்களும் கூடவே வருவதைத் தடுத்து நிறுத்த முடியாத நிலை ஏற்படும். அப்போது குய்யோ முறையோ என்று குளறுவதில் அர்த்தம் ஏதுமில்லை.

குறைந்தபட்சம் விந்தனுக்கு இருக்கும் அரசியல் நேர்மையாவது கூட்டணிக்கும் இருக்கவேண்டாமா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு உறுப்பினரான கோவிந்தம் கருணாகரனும் இணைந்துகொண்டார்.

குறித்த உறுப்பினர்கள் நராகசுரனை கைது செய், கயவனை கைதுசெய் என்று கோசங்களைஎழுப்பியதோடு பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால், சுமார் 2 மணி நேரத்துக்கும் அதிகமான காலம் சபை நடவடிக்கைகள் சுமூகமற்று இருந்தோடு ஒத்திவைக்கும் நிலைமையும் ஏற்பட்டது

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. தினப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது மாத்தளை ரத்வத்தை தோட்டத்தில் வசிக்கும் குடும்பமொன்றி வீட்டை தோட்ட உதவிமுகாமையாளர் உடைத்தெறிந்தமைக்கு நீதி கோரி நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பி ஆவேசமாகப் பேசத் தொடங்கினார்.

இதனையடுத்து, ஏனைய மலையக உறுப்பினர்கள் கோசங்களை எழுப்பியவாறு சபைக்கு நடுவே வருகை தந்ததுடன் அவர்களுடன் வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இணைந்து கொண்டு பதாகைகளை ஏந்தியவாறு, கோசங்களைஎழுப்பியவாறு சபாமண்டபத்துக்குள் பிரவேசித்தனர்.

அவர்களைகட்டுப்படுத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முயன்றபோதும் அதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டதால் படைக்கல சேவிதர்களினால் செங்கோலுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

எதிர்கட்சியினரின் ஆர்ப்பாட்டத்துக்கு அமைச்சர்கள் ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க ஆகியோர் பதிலளித்து நிலைமையை கட்டுப்படுத்த முயன்றபோதும் நிலைமை சுமூகமடைந்திருக்கவில்லை.

இந்நிலையில், சபைக்கு நடுவில் வருகை தந்தவர்கள் சொற்ப நேரத்தில் சபைக்கு நடுவே அமர்ந்து ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்தனர். ரத்வத்தை தோட்டத்தில் வசிக்கும் குடும்பமொன்றின் வீட்டை உடைத்த தோட்ட உதவி முகாமையாளரை உடனடியாக கைது செய்ய வேண்டுமென்று தொடர்ச்சியாக கோசங்களைஎழுப்பினவாறு அமர்ந்திருந்தனர். இதனால் சபை நடவடிக்கைகள் முதலில் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டபோதும் பின்னர் இருமணிநேரத்தின் பின்னர் மீண்டும் ஆரம்பமாகின.

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் கிளிநொச்சியில் மலையக மக்களைத் தரக்குறைவான வார்த்தையால் விமர்சித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனுக்கு எதிராக சர்ச்சை கிளப்பப்பட்டிருந்தது. அவர் பேசியது என்று தெரிவித்து ஒரு தொலைபேசி உரையாடலின் ஒலிப்பதிவும் வெளியிடப்பட்டு அவருக்கு எதிரான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## சரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பித்துள்ளமை பெரும் பிரச்சினைக்குரியது.

குருந்தூர்மலைக்குக் ஒகஸ்ட் 18 தமிழ் அரசியல்வாதிகளுடன் வருகை தந்தகுண்டர்கள் அப்பகுதியில் இருந்த குருந்தூர்மலையின் விகாராதிபதி சாந்த போதி தேரரைத் தகாத வார்த்தைகளால் தூற்றி, வெளியேற்றினர். இவ்வாறான செயற்பாடுகளால் பௌத்தர்களின் மனம் பாதிக்கப்படாதா? நாங்கள் பொறுமையாக இருக்கின்றோம். அந்தப் பொறுமையை கோழைத்தனம் என்று கருதக் கூடாது

இனவாதகொள்கையற்ற தமிழ் நீதிபதிகள் பலர் நாட்டில் உள்ளார்கள். ஆகவே, அவர்களை முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க வேண்டும். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் நீதிபதி இளஞ்செழியனின் உயிரைச் சிங்கள பௌத்த பொலிஸாரான சரத் ஹேமச்சந்திர தனது உயிரைக் கொடுத்து பாதுகாத்தார். நீதிபதி இளஞ்செழியன் அந்தப் பொலிஸாரின் பிள்ளைகளின் கல்விச் செலவுகளை முழுமையாகப் பொறுப்பேற்று அவர்களுக்கு இன்றும் உதவி செய்து வருகின்றார்.

எம்மத்தியில் இனவாதம், மதவாதம் கிடையாது. இல்லாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க வேண்டாம் என்பதைத் தமிழ் அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் விடுதலைப் புலிகளைப் போசித்தார். இறுதியில் புலிகளே அவரைப் படுகொலை செய்தார்கள். அமிர்தலிங்கத்தின் மனைவி மற்றும் இரு பிள்ளைகளைச் சிங்கள பௌத்த பாதுகாவலர்களே பாதுகாத்தார்கள்.

சிங்கள இனத்துக்கு எதிராகச்செயற்படுபவர்களை - கடுமையாக விமர்சிப்பவர்களை சிங்கள பௌத்தர்களே பாதுகாத்துள்ளார்கள். இவ்வாறான இனம் உலகில் எங்கும் இருக்காது. சிங்களவர்களுக்கும், பௌத்தமரபுரிமைகளுக்கும் எதிராகச் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளின் பாதுகாப்புக்குச் சிங்கள பௌத்தர்களே உள்ளார்கள்.

குருந்தூர்மலையில் கை வைப்பதை அடிப்படைவாதிகள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். சிங்கள பௌத்தர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. தொல்பொருள்பணிப்பாளர்நாயகம் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தொல்பொருள் விவகாரம் நாட்டின் தற்போதைய பிரதான தேசிய பிரச்சினையாக உள்ளது. தொல்பொருள் எமது உரிமை. அத்துடன் தொல்பொருள் எமது தேசிய அடையாளம். அந்தவகையான தேசிய அடையாளத்தை அழிக்க முயற்சிப்பது தேசத்துரோகம். தூர நோக்கமற்ற வகையில் பிறப்பிக்கப்படும் கட்டளைகளால் இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெறும். அவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் அதற்கு நீதிபதியும், தமிழ் அரசியல்வாதிகளும்தான் பொறுப்பு - என்றார்.

இந்த உரையின்போது சரத் வீரசேகர நீதிபதியை தனிப்பட்ட ரீதியில் மிக மோசமாக விமர்சித்தார். பொதுவெளியில் பயன்படுத்தக்கூடாத வார்த்தைகளை அவர் பயன்படுத்தினார்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்களையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

இவ்வாறு இடம்பெறும் அமைச்சின் அவசரபயணம் தனிப்பட்ட பயணமா அல்லது அரச பயணமா என்பதும் இதுவரை கண்டறியப்படாதபோதும் இன்று சீனா பயணமாகவுள்ளார் எனஇந்தியாவிற்குப்பயணமாகமுன்பே தகவல் வெளியாகியிருந்தது.

## சிங்கப்பூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாயு வெளியேற்றத்தை மட்டுப்படுத்தும் நோக்கில் இலாபகரமான முறையில் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான வாய்ப்பு கிடைக்கும். அதற்கமையவே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தேசியபாதுகாப்புதொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலைமாற்றம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ் சமரதுங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## முதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டு சம்பவங்களுக்கு தனிப்பட்ட தகராறுகளும் காரணமாக இருந்துள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழப்பு மற்றும் காயமடைதல் சம்பவங்கள் தவிர, ஆறு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் எந்தவித உயிரிழப்புகளும் அல்லது காயங்களும் இல்லாமல் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## ‘புஷ்பா’ ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஞ்சாவைகாவல்துறையினர் பறிமுதல்செய்துள்ளனர். கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தப்படுவதற்காகவே இந்தக்கஞ்சாதமிழ்நாட்டுக்கு எடுத்து வரப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நீதிபதியினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலையில்பொங்கலிடுவதற்கு முல்லைத்தீவு நீதிபதி தமிழர்களுக்கு அனுமதி வழங்கியதற்காக அவரைக்கடுமையான வார்த்தைகளால் விமர்சித்திருந்தார். நீதிபதியைத் தனிப்பட்ட ரீதியில் விமர்சிப்பதாக அது அமைந்திருந்தது. அது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே கருணாகரம் சரத்வீரசேகரவை மனநோயாளி என்றுவிளித்தார். அவர்அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புற முதுகில் குத்தும் பழக்கம் சிங்களவர்களுக்கு இல்லைஎன்று சரத்வீரசேகர கூறினார். தமிழர்கள் நன்றி மறந்தவர்களும் அல்லர்; துரோகமிழைத்தவர்களும் அல்லர் என்பதனை அவர் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காக அவருக்குச் சில விடயங்களைநினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இலங்கைசுதந்திரமடைய உங்களுக்குத் தமிழர்கள் தேவைப்பட்டார்கள். சேர். பொன். இராமநாதன், சேர். அருணாச்சலம் ஆகியோர் இலங்கை சுதந்திரமடைய முன்னிலை வகித்தார்கள் என்பதை மறந்து விடக் கூடாது. ஆனால், சுதந்திரத்துக்குப் பின்னர் அவர்கள் உங்களுக்குத் தேவைப் படவில்லை. அதனால் தமிழர்கள் பல அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப் பட்டார்கள்.

1957 ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தை அறிமுகப்படுத்தி இந்த நாட்டை பெரும் இன வன்முறைக்குள் தள்ளியது சிங்கள ஆட்சியாளர்கள்தான் என்பதை நீங்கள் எவரும் மறந்து விடக்கூடாது

தனிச் சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினைகளுக்குத்தீர்வாக தந்தைசெல்வாவுடன் அப்போதைய பிரதமர் பண்டார நாயக்க ஒப்பந்தம் கைச்சாத்திட்டார். பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன கொழும்பில் இருந்து கண்டிக்குப் பௌத்த தேரர்களுடன் எதிர்ப்புப் பேரணியில் ஈடுபட்டார்.

சொந்த நாட்டில் தமிழர்களைப் படுகொலை செய்து அவர்களை அகதிகளாக்கிய பெருமை சிங்கள பெரும்பான்மை ஆட்சியாளர்களையே சாரும் என்பதையும் நீங்கள் மறந்து விடக் கூடாது.

தமிழர்கள் ஒருபோதும் ஆயுதப் போராட்டத்தை விரும்பவில்லை. அஹிம்சை வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்போராடினார்கள். ஒப்பந்தங்களைக் கைச் சாத்திட்டார்கள். ஆனால், தமிழர்களின் அஹிம்சை வழிப் போராட்டத்தைச் சிங்களத் தலைவர்களே ஆயுதப் போராட்டமாக மாற்றியமைத்தார்கள்.

குருந்தூர்மலையில் சிங்கள பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லை என வடக்கு மற்றும் கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், தெற்கில் இருந்து கொண்டு குருந்தூர்மலை பௌத்தர்களுடையது என்று கூச்சலிடுகின்றீர்கள். விடுதலைப் புலிகள் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து பௌத்த விகாரைகள் அழிக்கப் படவில்லை, அவை பாதுகாக்கப்பட்டன.

தெற்கில் இனவாதத்தைப் பரப்பி விடுகின்றீர்கள். கொழும்பில் வாழும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை முற்றுகையிடுவதாகக் கூறி இனவாதத்தைத் தோற்றுவிக்கின்றீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் ஒரு கூட்டணியாக இணைந்து இனவாதத்தைப் பரப்பி இந்த நாட்டை இனவாதத் தீக்குள் தள்ளுகின்றீர்கள்.

குருந்தூர்மலையில் பொங்கல் பொங்குவதற்கு இடமளித்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியை சரத் வீரசேகர விமர்சிக்கின்றார். உண்மையில் சரத் வீரசேகரதான் ஓர் அரசியல் மனநோயாளி. இவரைப் போன்ற அரசியல் மனநோயாளிகள் நாடாளுமன்றத்தில் இருந்து மாத்திரமல்ல, இலங்கை அரசியலிலும் இருந்தும் முற்றாக நீக்கப்பட வேண்டும் - என்றார்.

## 11 ராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக ஏற்றுக்கொண்டார்.

அதி நவீன தகவல் தொடர்பு சாதனங்களுடன் பதிக்கப்பட்ட இந்த வாகனங்கள் முதலில் இராணுவ நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்டவை.

இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்தின் பாதுகாப்பு உதவியாளர், அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவிடம் வாகனங்களைகையளித்தார்.

இலங்கை பாதுகாப்பு உயர் அதிகாரிகள் சீன தூதரக அதிகாரிகளுடன் இணைந்து வாகனங்களை சோதனையிட்டதுடன், இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றும் கையெழுத்திடப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் மேலதிக செயலாளர்கள், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் உதவிப் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் கலந்துகொண்டனர்,

## 10 பேர்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துக்கொள்கிறோம். நடைபெறக்கூடாத சம்பவமொன்றேநடைபெற்றுள்ளது. தேவையற்ற விதத்தில் கட்டப்பட்டிருந்த இந்த வீட்டை அகற்றுவதற்கு தோட்ட உதவி முகாமையாளர் நேரடியாக தலையீடு செய்துள்ளார்.

தேவையற்ற விதத்தில் கட்டப்படும் வீடுகளை அகற்றுவதற்கு சட்ட ரீதியான முறையொன்று உள்ளது. அதனை உதவி முகாமையாளர் பின்பற்றாது இவ்வாறு செயற்பட்டுள்ளார். குறித்த உதவி முகாமையாளருக்கு கட்டாய விடுறையை அளித்து இடத்தையும் மாற்றி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நான் பணித்துள்ளேன்.

அவருக்கு எதிராக உரிய விசாரணைகள் நடைபெற்றதும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த சம்பவம் தொடர்பில் அறிந்த உடனே அமைச்சர் ஜீவன் தொண்டமான், குறித்த இடத்திற்கு சென்று, அந்த மக்களுக்காக நின்றார். அதேபோன்று மனோகணேசன் மற்றும் இராதாகிருஷ்ணன் போன்றோரும் எனக்கு அழைப்பை மேற்கொண்டு இது தொடர்பில் வலியுறுத்தினார். 24 மணித்தியாலத்துக்குள் அமைச்சர் ஜீவன் அங்கு சென்றார்.

முகாமையாளர் உட்பட அனைவரும் அங்கு அனுப்பப் பட்டனர். தோட்ட மக்களுக்கு 10 பேர்ச் காணியை வழங்க வேண்டும். இதனை சட்ட ரீதியாக உரிய வகையில் செய்ய வேண்டும். இதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் - என்றார்.

# மயிலத்தமடு பிரச்சினை குறித்து உடன் சபையின் கவனத்தை ஈர்த்த கஜேந்திரன்

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை மேச்சல்தரை மயிலத்தமடு மாதவனை பகுதி தொடர்பாக ஆராய்வதற்கு சென்ற மதத்தலைவர்கள் தலைமையிலான குழுவினர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உடனடியாக நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

நாடாளுமன்றத்தில் சபை நடவடிக்கைகள் நேற்றையதினம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பியவாறு எழுந்த அவர், மேற்படி விடயத்தினை சபையின் வனத்திற்கு கொண்டு வந்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை மேச்சல்தரை மயிலத்தமடு மாதவனை பகுதி பண்ணையாளர் எதிர் நோக்கும் பிரச்சனை தொடர்பிலும் அத்துமீறி பௌத்த விகாரை அமைத்து, காணி அபகரிப்பில் ஈடுபடுவது தொடர்பிலும் ஆராய்வதற்காகச் சென்ற பல சமய தலைவர்கள், பண்ணையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை பௌத்த மதகுரு தலைமையிலான காணி அபகரிப்பு குழுவினர் வழிமறித்துதடுத்துவைத்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் காணி அபகரிப்பு மற்றும் விகாரை அமைப்பது தொடர்பாகவும் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனை தொடர்பாகவும் மட்டக்களப்பு மாவட்ட சமயத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் கொண்ட குழுவினர் சம்பவதினமான இன்று (நேற்று) மயிலத்தமடு பகுதிக்கு சகிதம் வாகனங்களில் சென்று பண்ணையாளர்களை சந்தித்து கலந்துரையாடிவிட்டு பகல் 12 மணியளவில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

இதன்போது எல்லைபகுதியிலுள்ள கம்பி பாலத்தின் பகுதியில் பௌத்த தேரர் ஒருவருடன் அந்தபகுதி சிங்கள மக்கள் ஒன்றினைந்து வாகனங்களை தடுத்து நிறுத்தி வாகனங்களின் திறப்புக்களை எடுத்து அவர்களைத் தடுத்து வைத்துள்ளனர்.

இவர்களை மீட்பதற்கு வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தலைமையிலான பொலிஸார் அந்த பகுதிக்கு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே இந்த சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# பணிப் பெண்ணாகச் சென்றவர் சாவு: உடலை கொண்டுவர உதவ கோரிக்கை

சவூதி அரேபியாவுக்கு கடந்த வருடம் வீட்டு பணிப்பெண்ணாக சென்ற ராஜேந்திரன் தினகேஸ்வரி எனும் பெண் உயிரிழந்துள்ளார் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் டிக்கோயா, பகுதியை வசிப்பிடமாக கொண்ட 27 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயான இராஜேந்திரன் தினகேஸ்வரி என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கும் தனது கணவருக்கும் நிரந்தர வருமானம் மற்றும் இருப்பிட வசதிகள் இல்லாத நிலையில் இரண்டு பிள்ளைகளின் தாயான தினகேஸ்வரி குடும்ப வறுமையை நிவர்த்திக்கும் நோக்குடன் கடந்த வருடம் சவுதி அரேபியாவுக்கு வீட்டு பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

இவ்வருடம் 2023.04.05ஆம் திகதி வரை அவர் தங்களுடன் தொலைபேசி ஊடாக தொடர்புகளை பேணினார் எனவும் அதன் பிறகு அவரின் தொலைபேசியுடன் தொடர்பை ஏற்படுத்த முடியாது போயுள்ளதாகவும் அவரது அத்தை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பயண முகவருடன் தொடர்புகளை மேற்கொண்டபோது தமக்கு மே மாதம் 8 ஆம் திகதியே தினகேஸ்வரி இறந்து விட்டார் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஐந்தாம் மாதம் முதல் தாம் இவரின் இறப்பு தொடர்பாக தெளிவைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், வெளிநாட்டு அமைச்சு, பயண முகவர், சவூதி தூதரகம் என அனைத்து இடங்களுக்கும் சென்று வந்த போதும், இதுவரைக்கும் தமக்கு தமது மருமகளின் மரணம் தொடர்பாக எவ்வித உண்மைகளையும் தெரிந்துக் கொள்ள முடியாது உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலா விசா மூலமே இவர் சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டார் எனவும் இவரின் கடவுச்சீட்டில் இவரின் அப்பாவின் பெயரான ராஜேந்திரன் என்பதற்கு பதிலாக தாத்தாவின் பெயரான சாமிநாதன் சேர்க்கப்பட்டு தினகேஸ்வரி சாமிநாதன் என குறிப்பிடப்பட்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தினகேஸ்வரி வெளிநாட்டுக்கு சென்ற பின்னரே தமக்கு தெரியவந்ததாகவும் அவரின் அத்தை சாமிநாதன் லெச்சுமி தெரிவிக்கின்றார்.

தனது மருமகளின் உடலை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு 10 லட்சம் ரூபா கேட்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உயிரிழந்த பெண்ணின் இரண்டு பிள்ளைகளையும் வளர்க்க தமக்கு எவ்வித உதவியும் இல்லை எனத் தெரிவித்துள்ள குறித்த பெண்ணின் அத்தை, தனது மருமகளின் மரணம் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்றும் அவரது சடலத்தை நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (05)



# குற்றச்சாட்டுக்களைக் கண்டு ஒருபோதும் பின்வாங்கோம்

## அநுரகுமார திட்டவட்டம்



தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் பொதுமக்களது நிதியை துஷ்பிரயோகம் செய்ததில்லை என அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'ஒருவரின் பணப் பரிவர்த்தனை தொடர்பாக இந்த நாள்களில் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தநாட்டுமக்களின் பணத்தில் ஒரு சதம் கூட நானோ அல்லது எனது கட்சியைச் சேர்ந்த எவரும் திருடவில்லை அல்லது வீணடிக்கவில்லை.

அவ்வாறு மக்களின் பணம் திருடப்பட்டாலோ அல்லது வீணாக்கினாலோ இப்படி அரசியல் செய்ய முடியாது. அவதூறுகள் மற்றும் குற்றச்சாட்டுக் களை கண்டு நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.

எமது கட்சி பிரபலமடைந்து வருவதால் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மேலும் அதிகரிக்கும். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் இனிமேல் காலாவதி ஆக மாட்டாதாம்

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்களின் அனைத்து பிரதிகளும் இனிமேல் காலாவதி ஆகாது என பதிவாளர் நாயகத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சான்றிதழ்களின் தொடர்புடைய பிரதிகள் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் வழங்கப்பட்டன.

எவ்வாறாயினும், பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அனைத்து சான்றிதழ்களையும் கால எல்லையின்றி ஏற்றுக் கொள்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, குடிவரவு திணைக்களம் மற்றும் ஆட்பதிவு திணைக்களம் ஆகியவற்றுக்கு அறிவித்துள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிறப்பு, இறப்பு மற்றும் திருமணம் சான்றிதழ்களின் பிராக்டிக்கல் தெளிவாக இருந்தால் அவற்றைப் பெற மீள பெற்றுக்கொள்ள வேண்டாம் என பொதுமக்களிடம் அத்திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

சான்றிதழ்களில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் மட்டுமே புதிய பிரதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அத்திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (05)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான சிறுவன் நுவரெலியாவில் சாவு

நுவரெலியா - பம்பரக்கலையில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 16 வயதுடைய சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பம்பரக்கலை பகுதியில் விறகு சேகரிப்பதற்காக சென்ற போது, நால்வர் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த நான்கு பேரும் சிகிச்சைகளுக்காக நுவரெலியா பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து 16 வயதுடைய சிறுவன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளவிக்கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்த குறித்த சிறுவன், நுவரெலியா, பம்பரக்கலை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை நுவரெலிய பொது வைத்தியசாலையில் இடம்பெற்றதைத் தொடர்ந்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மத்தியமலைநாட்டின்பல பகுதிகளில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி பலர் உயிரிழந்துள்ள நிலையில், குளவிக்கூடுகள் உள்ள இடங்களை இனங்கண்டு அவற்றை உரிய முறையில் அகற்றுமாறு அம்மக்கள் தொடர்ந்தும் குரல்கொடுத்துவருகின்றனர்.

எனினும், இதற்கான தீர்வொன்று இதுவரை வழங்கப்படாத நிலையிலேயே, தற்போது மேலுமொரு உயிர் இழக்கப்பட்டுள்ளது. எனவே, இனியாவது அதிகாரிகள் இதற்கான உரிய நடவடிக்கையை எடுத்து தங்களை பாதுகாக்க வேண்டும் என்பதுதான் அம்மக்களின் கோரிக்கையாகவும் இருக்கிறது. (05)



# முல்லைத்தீவில் வெகு சிறப்பாக நடந்த மரதன் ஓட்டப் போட்டி

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) வடமாகாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியொன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

காலை 7.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆரம்பித்த இந்த மரதன் ஓட்டப்போட்டி, குமுழமுனை மகாவித்தியாலய முன்றிலில் நிறைவடைந்தது. இந்த ஓட்டப் போட்டியில் 200 இற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தனர்.

கனடாவில் வசிக்கும் முன்னாள் குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் மரதன் ஓட்ட வீரரான கந்தசாமி பத்மநாதன் என்பவரே இந்தப் போட்டிக்கான முழுமையான நிதியுதவியை வழங்கியுள்ளார்.

இதில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் வெற்றியீட்டிய வீர வீராங்கனைகளுக்கு கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் முல்லை வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர், நிர்வாகப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# நாட்டில் உள்ள 73 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 28 வீதம் ஆகக் குறைந்தது

73 பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 28 வீதமாக குறைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் எட்டு லட்சத்து இருபதாயிரம் ஏக்கர் அடியாக குறைந்துள்ளதாக நீர் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் பொறியியலாளர் சுதர்சினி விதானபத்திரன தெரிவித்தார். (05)



# சுற்றுலாத்துறைக்கு சிறந்த வேலைத்திட்டம் அவசியம்

## விஜித ஹேரத் வலியுறுத்து

சுற்றுலாத்துறையை கட்டியெழுப்ப அரசாங்கமும் மத்திய வங்கியும் இணைந்து சிறந்த வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தேசிய சுற்றுலாக் கொள்கை இல்லை எனவும், அரசாங்கம் இன்னும் அதனை உருவாக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்ததற்கு நாட்டை ஆட்சி செய்பவர்களே காரணம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (05)

# யாரேனும் எமக்கு அடித்தால் நாமும் திருப்பி அடிப்போம்

## நாடாளுமன்றிலும் எச்சரித்தார் மனோ



யாரேனும் அடித்தால் நாமும் அடிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

ரத்வத்த தோட்ட விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசுக்கு சொந்தமான ரத்வத்த தோட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தை ஒட்டு மொத்த உலகமும் பார்த்துள்ளது.

இது மலையக மக்களுக்கு மட்டுமன்றி, ஒட்டு மொத்த இலங்கைக்கும் ஏற்பட்டுள்ள அவமானமாகும்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய தோட்ட முகாமையாளரை உடனடியாகக் கைது செய்யுங்கள்.

சம்பவம் இடம்பெற்றபோது அமைச்சர் ஒருவர் அங்கு சென்றார் என இவர்கள் கூறுகிறார்கள். எனக்கும் அங்கு சென்றிருக்க முடியும்.

ஆனால், நான் மனோ கணேசன். சிவாஜி கணேசனோ, ரஜினிகாந்தோ அஜித்தோ அல்ல. நான் சென்று பிழையான முன்னுதாரணமாகிவிடக்கூடாது.

நாம் அனைவருடனும் ஐக்கியத்துடன் வாழ வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். எமக்கு யாரேனும் அடித்தால் நாமும் அடிக்க வேண்டும் என்பது உண்மைதான்.

போராட்டத்தின் போது வீடுகளுக்கு தீ வைத்தார்கள். இதன் போது நீங்களும் அவர்களுக்கு திருப்பி அடித்தீர்கள் தானே.

எனினும், நாம் யாரையும் திருப்பி அடிக்கவில்லை. இதனால்தான் இந்த சம்பவத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுகிறோம்.

வெள்ளையர்களிடம் அடிமையாகி இருந்த நாம், இன்று தோட்ட முகாமையாளர்களிடம் அடிமைகளாக உள்ளோம்.

தோட்டங்கள் ஒன்றும் அவர்களுக்கு உரித்தானது கிடையாது. அவர்களுக்கு குத்தகைக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது என்பதை மறந்துவிட வேண்டாம்.

கட்சி பேதங்கள் கடந்து, இந்த சம்பவத்திற்கு தீர்வொன்றை வழங்க வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சமாளிப்பு அல்ல நடவடிக்கையே அவசியம்

மாத்தளை எல்கடுவ ரத்வத்த தோட்டத்தில் தமிழ்க் குடும்பம் ஒன்று வசித்து வந்த வீடு தோட்ட நிர்வாகத்தினால் இடித்து அழிக்கப்பட்டு அங்கிருந்தவர்கள் நடுத்தெரிவில் நிறுத்தப்பட்டுள்ளனர். மலையக மக்கள் இந்த நாட்டுக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவடையும்போதும் அவர்கள் கொத்தடிமைகளாகவே நடத்தப்படுகின்றார்கள் என்பதைப் பறைசாற்றுவதாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது. ஆட்சியாளர்களும் அரசுத் தலைவரும் என்னதான் மினுமினுப்பான நாகரிக அரசியல் பேச்சுக்களை நிகழ்தினாலும், கொள்கை அறிவிப்புக்களை விடுத்தாலும் அடிப்படை மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதையே இந்தச் சம்பவம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

ரத்வத்த தோட்டத்தின் கீழ் பகுதியில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் வசித்துவந்த வீடு, தோட்ட உதவி முகாமையாளர் மற்றும் அவரது உதவியாளர்களால் ஓகஸ்ட் 19 உடைக்கப்பட்டு அந்த மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த வீடு அனுமதி பெற்றே அமைக்கப்பட்டிருந்தது என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ். இந்த வீடு அரசுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அரச காணியில் அமைக்கப்பட்டிருந்த வீட்டை எப்படி தோட்ட முகாமையாளர் அடித்த நொறுக்க முடியும்? என்றும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதனால்தான் அந்தத் தோட்ட நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும், வீட்டை இடித்த உதவி முகாமையாளரைக் கைது செய்யவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர். தனியார் நிறுவனங்களுக்கு தோட்டங்கள்தான் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கின்றனவே தவிர, அங்குள்ள தோட்ட மக்கள் அல்லர் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான்கூட நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியிருந்தார்.

இத்தனைக்குப் பின்னரும் தோட்ட நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்க ஆளும் தரப்பு தயக்கம் காட்டுவது பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரனவின் பதிலில் இருந்து தெரிகிறது. நாடாளுமன்றத்தில் மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களுக்குப் பதிலளித்த அமைச்சர், தோட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்துக்கு முதலில் நாம் கவலையை தெரிவித்துக்கொள்கிறோம் என்றார். நடைபெறக்கூடாத சம்பவமொன்றே நடைபெற்றுள்ளது என்றும் விளித்தார். தேவையற்ற விதத்தில் கட்டப்படும் வீடுகளை அகற்றுவதற்குதற்கான சட்ட ரீதியான முறையொன்று உள்ளபோதும், அதனை உதவி முகாமையாளர் பின்பற்றாது இவ்வாறு செயற்பட்டுள்ளார் என்றும் கூறினார்.

ஆகமொத்தத்தில் உதவி முகாமையாளர் தவறிழைத்தார் என்பதை அமைச்சரே நாடாளுமன்றத்தில் ஒப்புக்கொள்கிறார். ஆனால் அவர் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பதிலாக, குறித்த உதவி முகாமையாளருக்கு கட்டாய விடுறையை அளித்து இடத்தையும் மாற்றி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நான் பணித்துள்ளேன் என்றுதான் அமைச்சர் கூறுகின்றார்.

அவருக்கு எதிராக உரிய விசாரணைகள் நடைபெற்றதும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தாலும் அது ஒரு பூசிமெழுகல் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. உதவி முகாமையாளர் சட்டப்படி செயற்படவில்லை என்று அமைச்சரே கூறிவிட்ட பின்னர் அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் தயங்கவேண்டும். அவர் செய்தது சரியா தவறா என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும். அதைவிடுத்து விசாரணை, அதன் பின்னர் நடவடிக்கை என்பதெல்லாம் காலத்தை இழுத்தடித்து குற்றவாளியைக் காப்பாற்றும் தந்திரம் மட்டுமே.

ஆளும் தரப்பின் இந்த அணுகுமுறை கண்டிக்கத்தக்கது. அதனை மாற்றி உடனடியாக சம்பந்தப்பட்ட உதவிப் பொது முகாமையாளரைக் கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த காவல்துறையினருக்கு அரசுத்தலைவர் பணிப்புரை விடுக்கவேண்டும். நீதி உடனடியாக நிலைநாட்டப்படுதல் வேண்டும்.

இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு, மலையக மக்களுக்கு 10 பேர்ச் நிலத்தை வழங்குவதே என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். அதன்படி விரைவில் நிலங்களைப் பகிர்ந்தளிப்பதற்கும் ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும்.



# மக்கள் கேட்டால் இல்லை: ஆனால் வடக்கில் படையினருக்கு காணிகள்

**ந.லோகதயாளன்**



வடக்கு மாகாணத்தில் அரச நிலங்கள் படையினரின் பாவனைக்கு கையளிக்கப்படுகின்றபோதும் காணியற்றவர்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்படுவதில்லை.

வடக்கு மாகாணத்தில் படையினரின் பாவனைக்கென 6 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலத்தைச் சுவீகரித்து தமக்குத் தருமாறு மாவட்டச் செயலகங்களை பாதுகாப்பு அமைச்சு கோரிநிற்கின்றது.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் படையினர் பல்லாயிரக்கணக்கான நிலங்களில் முகாம் அமைந்து நிலைகொண்டுள்ளனர். அவற்றில் தனியாருக்குச் சொந்தமான காணிகள், அரச காணிகள், மற்றும் திணைக்களங்களிற்குச் சொந்தமான காணிகள் என்பவற்றுடன் பாதுகாப்பு அமைச்சிற்கு உரித்தான நிலங்களும் உள்ளன.

இதிலே தனியாருக்குச் சொந்தமான காணிகள் மற்றும் அரச காணிகளை படையினரின் நிரந்தரப் பயன்பாட்டிற்கு வழங்குவதானால் சட்டப்படி சுவீகரிக்கும் பணியை பிரதேச செயலகம் மற்றும் நில அளவைத் திணைக்களம் மேற்கொள்ளவேண்டும். இதில் தனியாரின் காணிகளைச் சுவீகரிக்க நில உரிமையாளரின் ஒப்புதலும் பெறப்படுதல் வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது 3 ஆயிரத்து 214 ஏக்கர் நிலம் படையினரிடம் உள்ளது. இதே நேரம் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இதைவிட மேலும் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் படையினர் வசம் உள்ளன. இவற்றையெல்லாம் சுவீகரித்துத் தருமாறு படையினர் மாவட்டச் செயலகங்கள் ஊடாகப் பிரதேசசெயலகங்களை கோரி நிற்கின்றனர்.



கிளிநொச்சியில் 220 ஏக்கரும் முல்லைத்தீவில் 1,508 ஏக்கரும் மன்னாரில் 1,060 ஏக்கரும் சுவீகரிப்புக்குத் தேவைப்படுவதாகப் படையினர் தெரிவித்துள்ளனர். வவுனியாவில் 301 ஏக்கர் நிலம் கோரப்பட்டுள்ளது.

வடக்கில் மட்டும் மொத்தம் 6 ஆயிரத்து 286 ஏக்கர் தனியார் காணிகள் படையினர் வசம் உண்டு என மாவட்டச் செயலகங்கள் உறுதி செய்கின்றன. இவற்றில் பெருமளவானவற்றைச் சுவீகரிப்பதற்கே படையினர் முனைப்போடு உள்ளனர்.

படையினர் கோரும் இந்த நிலங்களிற்கு அப்பால் படையினருக்கு நிரந்தர முகாம்கள் அமைப்பதற்கென ஏற்கனவே அரச நிலங்கள் பல வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் பாதுகாப்பு அமைச்சிற்குப் பாரதீனப்பட்டுள்ளன.

வடக்கில் இவ்வாறு 32 அரச காணித் துண்டுகள் மக்களிற்கோ அல்லது மக்கள் பிரதிநிதிகளிற்கோ தெரியாது மாகாண ஆளுநரால் படையினருக்குஎன நிரந்தரமாக பாரதீனப்படுத்தப்பட்டுள்ளன.

அரச காணிகள் அந்தப் பிரதேச பொதுப் பயன்பாட்டிற்காக ஒப்படைக்க வேண்டும் என மாவட்டச் செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் நீண்ட காலமாக கோரிக்கை விடப்பட்டு வருகின்றன. இருந்தபோதும் அரச காணிகள் இரகசியமான முறையில் சில அரச அதிகரிகளின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு அமைச்சிற்கு வெஸ்ரிங் செய்யப்பட்டு பிரதேச செயலாளர்களிடம் இருந்த உரிமை பாதுகாப்பு அமைச்சிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2020, 2021, 2022 ஆகிய 3 ஆண்டுகால எல்லைக்குள் மட்டும் 32 அரச காணிகள் பாதுகாப்பு அமைச்சிற்கு ஆளுநரால் கையளிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள இராணுவம், கடற்படை, விமானப் படையினர் ஆகியன தற்போது நிலைகொண்டுள்ள 32 இடங்களும் அவர்களிற்கு என்றே நிரந்தரமாக வெஸ்ரிங் செய்யப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கில் 22 கெக்டேயர் அல்லது 54 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இந்த 32 இடங்களில் ஒரேயொரு இடம் விமானப்படையிரின் பயன்பாட்டிற்காக முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவில் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று 3 இடங்கள் இராணுவத்தினருக்கும் எஞ்சிய 28 இடங்களும் கடற்படையினரின் பயன்பாட்டிற்காகவும் வழங்கப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு 16 முகாம்களிற்காக 9 கெக்டேயரும், 2021 இல் 6 முகாம்களிற்காக 6.5 கெக்டேயரும் 2022 ஆம் ஆண்டில் 10 முகாம்களிற்காக 6 கெக்டேயரும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களில் முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் பதவிக்காலத்தில் 12 முகாம்களிற்குரிய நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் மட்டும் இன்றும் 21 ஆயிரம் குடும்பங்கள் குடியிருப்பதற்குக் காணி இன்றி இருக்கும் நிலையிலேயே இந்த அரச நிலங்கள் அவர்களுக்கு அன்றி படையினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன விவசாயத்திணைக்களத்தின் பல்லாயிரம் ஏக்கர் நிலத்தைத் தமது உடமையாக்கிக் கொண்டுள்ளபோதும், வடக்கில் தற்போது படையினர் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மட்டுமே நிலை கொண்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்திருந்தார்.



**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது 3 ஆயிரத்து 214 ஏக்கர் நிலம் படையினரிடம் உள்ளது. இதே நேரம் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இதைவிட மேலும் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் படையினர் வசம் உள்ளன. இவற்றையெல்லாம் சுவீகரித்துத் தருமாறு படையினர் மாவட்டச் செயலகங்கள் ஊடாகப் பிரதேச செயலகங்களை கோரி நிற்கின்றனர்.**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டின் புராதனச் சின்னங்கள் மதங்களுக்குரியவை அல்லவாம்

## அமைச்சர் விதுர விக்ரமநாயக்க இப்படிக் கூறுகிறார்



நாட்டின் புராதன சின்னங்களை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பாக கையளிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

முல்லைத்தீவு, குருந்தூர் மலை விவகாரம்தொடர்பாகஇரண்டுவழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாக விடயதானத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் கூறப்போகும் கருத்துக்கள், அந்த வழக்குகளுக்கு சாதகமாவோ பாதகமாகவோ கூட மாறலாம்.

எனவே, வழக்கு விசாரணைகள் இடம்பெறும் ஒரு விடயம் தொடர்பாக என்னால்நாடாளுமன்றில்கருத்து கூற முடியாது.

இந்த நாட்டைப் பொறுத்தவரைபுராதனச்சின்னங்கள், நாடளாவிய ரீதியாக பல இடங்களில் காணப்படுகின்றன.

பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதத்துக்கு இவை உரியதா என்பதல்ல பிரச்சினை.

இந்தப் புராதனச் சின்னங்களின் பெருமையை நாட்டுக்கு மட்டுமன்றி, முழு உலகிற்கும் காண்பிக்க வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு இதனை நாம் இவற்றை பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும்.

இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும்நாம்மேற்கொள்ளத் தயாராக உள்ளோம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)







## சாய்ந்தமருதிலுள்ள பெண்கள் அமைப்புக்களுக்கு ஜனாஸா அடக்கும் செயன்முறைக் கருத்தரங்கு

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீலங்கா மற்றும் வை.எம்.எம்.ஏ. - மாவடிப்பள்ளி கிளையின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை சாய்ந்தமருதுசைனிங்ஸ்டார் பெண்கள்அமைப்பின்காரியாலயத்தில் பெண்களுக்கான ஜனாஸா அடக்கும் முறை சம்பந்தமான செயன்முறை கருத்தரங்கு நடைபெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் கலாசார பிரிவின் தலைவர் எ.எம்.எ. அஸ்ரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வளவாளராக மாவடிப்பள்ளி வை.எம்.எம்.ஏயின் செயலாளர் ஏ. அஷ்ரப் (மௌலவி) கலந்து கொண்டு விரிவுரையாற்றினார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது 14 ஆம் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். அபுல் ஹுதா, சைனிங் ஸ்டார்பெண்கள்அமைப்பின் தலைவிபிரோஸாகாரியப்பர், செயலாளர் ஆயிா சித்தீக்கா, பொருளாளர் தஸ்னீம் காரியப்பர் மற்றும் மனித மேம்பாட்டு அமைப்பின் கலாசார பிரிவின் துணைத் தலைவர் எ. எல். றில்வான், உயர் பீட உறுப்பினர் எம். முபீத் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போதுஇஸ்லாமிய ஜனாஸா அடக்கும் முறை சம்பந்தமானபலவிடயங்கள் செயல்முறைமற்றும்கேள்வி பதில் ரீதியாக கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு விரிவுரை அளிக்கப்பட்டவை குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

## எலைட் கழகத்துடன் கலந்துரையாடல் விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்





மனாரியன் 88 அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க மருதமுனை எலைட் விளையாட்டு கழகத்துடனான சிநேக பூர்வமான கலந்துரையாடல், பர்வின் ட்ரடிங் நிறுவனம் மற்றும்லதான்அக்ரோஇண்டர்நேசனல்நிறுவனபணிப்பாளர் அல் ஹாஜ் கலில் முஸ்தபாவுடன் மருதமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள முஸ்தபா கம்பளைஸ் நிறுவன காரியாலயத்தில் திங்கள் மாலை இடம்பெற்றது.

மேலும் எலைட் விளையாட்டு கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் இதன்போது எலைட் விளையாட்டு கழக வளர்ச்சிக்காக விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

## அராலி மத்தியில் வீடு தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளது

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மத்தி பகுதியில் உள்ள வீடு ஒன்று திங்கட்கிழமை தீயில் முழுமையாக எரிந்து சாம்பலாகியுள்ளது. இதன்போது வீட்டில் இருந்த 2 அலுமாரிகள், 5 கதிரைகள், ஒரு தொலைக்காட்சி பெட்டி, ஒரு சைக்கிள், ஒரு மேசை, உடைகள், ஒலிபெருக்கி சாதனங்கள், ஒன்றரை பவுண் தங்க ஆபரணங்கள், ஒரு தொகை பணம் உள்ளிட்ட வீட்டு தளபாடங்கள் என்பன இதன்போது தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. வீட்டின் உரிமையாளர் வேலைக்கு சென்றிருந்த நிலையில் அவரது மனைவி சமையலை முடித்துவிட்டு, அருகில் உள்ள கணவனின் தாயார் வீட்டுக்கு சென்றுள்ளார். இந்நிலையில் வீடு தீப்பற்றி எரிந்துள்ளது.

எவ்வாறு தீ விபத்து ஏற்பட்டது என அறியமுடியவில்லை. இச் சம்பவத்தில் கிஷ்ணபிள்ளை ததீஸ்வரன் என்பவரது வீடே இவ்வாறு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சுற்றுலா பணியக அதிகாரிகளுடன் ஆளுநர் சாள்ஸ் கலந்துரையாடல்





வடமாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள், திங்கட்கிழமை வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் 'சென்னையில் இருந்து காங்கேசன்துறைக்கு வருகை தரும் கோர்டிலியா என்ற உல்லாசப்பயணக் கப்பலில் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விசேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது' தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக்கலந்துரையாடலில்யாழ்.மாவட்டகாணி ஆணையாளர், யாழ். இந்திய துணைத்தூதுவர், வடமாகாண துறைமுக அதிகாரசபை தலைவர், வடமாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், தெல்லிப்பழை பிரதேச செயலர், வலிகாமம்வடக்குபிரதேசசபைசெயலாளர், உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த கலந்துரையாடலின் போது, 'இந்த உல்லாசப்பயணக் கப்பல் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சென்னையிலிருந்து புறப்பட்டு அம்பாந்தோட்டை, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் தங்கி வெள்ளிக்கிழமை காங்கேசந்துறை துறைமுகத்தை வந்தடைந்து மீண்டும் சென்னையைச் சென்றடைகின்றது. அவ்வாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் வந்திறங்கும் சுற்றுலாப்பயணிகளுக்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படாத நிலையே காணப்படுவதாக' வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து பயணிகளுக்குரிய அடிப்படைவசதிகள், உள்ளூர்ப்பயணங்களுக்குரிய வாகன ஒழுங்குகள், சுற்றுலா வழிகாட்டும் ஒழுங்குகள் என்பவற்றை செய்வதற்குரிய பொறிமுறைகள் தொடர்பாகவும் ஆளுநர், அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடினார். (05)

# குப்பையோடு தவறுதலாக வீசப்பட்ட 8 பவுண் நகைகளை மீட்டுக்கொடுத்த சாவகச்சேரி நகரசபை சுகாதாரபிரிவு









யாழ். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மண்டுவில் வட்டாரத்தில் வசிக்கின்ற குடியிருப்பாளர் ஒருவரால் வீதியில் குப்பைகளோடு வீசப்பட்ட சுமார் பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியான 8 பவுண் தங்க நகைகள் நகராட்சி மன்ற குப்பை மேட்டிலிருந்து சுகாதாரப் பகுதியினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் திங்கட்கிழமை மதியம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - சாவகச்சேரிமண்டுவில்வட்டாரத்தில்வேலுப்பிள்ளை வீதியில்வசிக்கும்குடியிருப்பாளர்ஒருவர்தனது வீட்டில் உள்ள சுமார் 8 பவுண் பெறுமதியான நகைகளை கொள்ளையர்களிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில் பழைய துணி ஒன்றில் கட்டி குப்பைகள் போல வீட்டிலேயே பாதுகாத்து வந்துள்ளார்.

இந்நிலையில் அண்மையில் அவரது வீட்டை சுத்தம் செய்கின்ற பொழுது குறித்த நகைகளும் குப்பைகளோடு குப்பைகளாக கட்டப்பட்டு வீதியில் கொட்டப்பட்டிருந்தன. தவறுதலாக அவர்களால் வீசப்பட்ட நகைகளை சாவகச்சேரி நகர சபையின் சுகாதாரப் பிரிவினர் கண்டுபிடித்து உரியவரிடம் ஒப்படைத்தமை அந்தப் பிரதேசத்தில் பெரும் பாராட்டைப் பெற்றுக் கொடுத்துள்ளது. (05)

OKAYA ELECTRIC VEHICLES

dsl We lead the way...!

# பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable

## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

# இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம் 3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

# நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு உணவகங்களில் திடீர் சோதனை






நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல்.எம்.றயீஸின் வழிகாட்டலில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவு உணவகங்களில் திடீர் சோதனை இடம்பெற்றது.

தற்போதைய காலகட்டத்தில் ஹோட்டல்களின் தரத்தைப்பேணும் வகையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் உணவகம்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்கே.எல்.எம்.றயீஸ்தெரிவித்தார்.

மேலும், இதில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற நீரில் கழுவாமல் வெட்டப்பட்ட வெங்காயம் மற்றும் சீர்குலைந்துகாணப்பட்டபாத்திரங்கள் மற்றும் ஒரு தடவை உபயோகித்த பின்னர் மீள்பாவனைக்காக வைக்கப்பட்ட எண்ணெய்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

எனவே, இதனைத் தடுக்கும்பொருட்டும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்றதை கண்டால் மக்கள் விழிப்புடன் இருந்து 0672250834 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்துமாறும் சுகாதாரப் பிரிவினர் மக்களைக் கோரியுள்ளனர்.

இந்தச்சோதனைநடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.எல். எம். றயீஸ் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், அபிவிருத்திஉத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.(05)

# யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்துப் பிரிவு குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என இரத்த வங்கி அறிவித்துள்ளது.

தற்போது நாளுக்கு நாள் குருதிக்கான தேவை அதிகரித்துச் செல்வதால் நோயாளர்களுக்குத்தேவையான குருதியை வழங்க முடியாதுள்ளது.

ஆகவே 18 - 55 வயதுக்கு இடைப்பட்ட, 50 கிலோகிராம் மற்றும் அதற்கு மேற்பட்ட நிறையும்கொண்ட ஆண், பெண் இருபாலாரும் எவ்வித பிரச்சினையுமின்றி இரத்ததானம்செய்யலாம்என வைத்தியசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் ஏற்கனவே இரத்ததானம் செய்தவர்கள் எவ்வித நோய்களுமின்றி இருந்தால் 60 வயது வரை இரத்ததானம் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலவும் குருதித் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் நிறைவடைந்தவர்களும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்புபவர்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், தங்கள் ஊர்களிலும் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அறிவித்தால் தாம் வருகை தந்து குருதியைசேகரிக்கும்பணிகளை முன்னெடுப்போம் என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

அத்துடன், 0772105375 அல்லது 0212223063 எனும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியும் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (05)

# உணவருந்திவிட்டு உறங்கிய இளைஞர் யாழில் உயிரிழப்பு

யாழில் திங்கட்கிழமை இரவு உணவருந்திவிட்டு உறங்கிய இளைஞர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த மிதுன்ராஜ் என்ற 31வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவதினத்தன்று இரவுணவு அருந்திவிட்டு படுக்கைக்கு சென்ற சில நிமிடங்களிலேயே அவர் கட்டிலில் அசைவின்றி காணப்பட்டுள்ளார் எனவும் இதனையடுத்து, அவரது வீட்டார் உடனடியாக அவரை வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் 'அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார்' எனத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அவரது சடலம் உடற்கூறுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)




# நாட்டு மக்களின் எதிர்ப்பை நாடாளுமன்றில் காண்பிக்கவே நம்பிக்கையில்லா பிரேரணை

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

காதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு அப்பால், மக்களின்எதிர்ப்பைநாடாளுமன்றுக்குகாண்பிக்கவேண்டும் என்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் நாடாளுமன்றில் சுகாதாரஅமைச்சர்கெஹலிய ரம்புக்வல்லவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றைசெப்ரெம்பரில் கொண்டுவரத் தீர்மானித்துள்ளோம்.

சிலர் கேட்கிறார்கள், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைவெற்றிபெற செய்ய முடியுமா என்று.

இந்த பிரேரணையை வெற்றி பெற செய்வது அல்ல எமது நோக்கம்.

மாறாக மக்களின் எதிர்ப்பை நாடாளுமன்றில் காண்பிக்கவே, இந்தப் பிரேரணையை கொண்டுவந்துள்ளோம்.

ஏனெனில், சுகாதாரப் பிரச்சினையென்பது இன்று பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

மருந்துத்தட்டுப்பாடுகள், தரமற்ற மருந்துகளின் பாவனை, சுகாதார திணைக்களத்தில்இடம்பெறும் ஊழல் மோசடிகள், நோயாளர்களின் மரணங்கள் என பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. நம்பிக்கையில்லாப் பிரேரணையைமட்டும்கொண்டு வந்து அரசாங்கத்திற்கு பாடத்தை புகட்ட முடியாது.

இதனால்தான், நாடளாவிய ரீதியாகவுள்ள அனைத்து பொது வைத்தியசாலைகளுக்குமுன்பாகவும், மக்களின் கையெழுத்து திரட்டும்பணிகளைதற்போதே ஆரம்பித்துள்ளோம்.

இந்தநடவடிக்கைஅடுத்த இரண்டு வாரங்களுக்கு இடம்பெறும். இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக சுகாதார அமைச்சின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும்.

இந்தப்பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண வேண்டிய பொறுப்பு சுகாதார அமைச்சருக்கு மட்டுமன்றி, ஜனாதிபதிக்கும் உள்ளது.

எனினும், இதனை மேற்கொள்ள இவர்கள் தவறிவருகிறார்கள். இதனால், தற்போது உலக சுகாதார ஸ்தாபனத்துக்கும் நாம் முறைப்பாடளித்துள்ளோம். - என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# சுகாதாரத் துறையை திட்டமிட்டு அழிப்பதற்கே அரசு தரப்பு முயற்சி

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



சுகாதார அமைச்சரும், சுகாதார அமைச்சின் செயலாளரும் இணைந்து சுகாதாரத்துறையை திட்டமிட்டு அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மருத்துவத் துறையில் உள்ள பல்வேறு சங்கங்களுடன் எதிர்க்கட்சி ஒன்றியத்தின் செயற்குழு நேற்று முன்தினம் சந்தித்தது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர், அத்தியாவசிய மற்றும் அத்தியாவசிய மற்ற மருந்துகளை ஒரே நேரத்தில் இறக்குமதி செய்து மக்களின் பணத்தை வீணடிக்கும் வேலைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் நாட்டில் இயங்கிவரும் மருந்துப் பொருள் மாபியாவை நிறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாட்டிற்கு அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாலான வெளிப்படையான, செயல்திறன் வாய்ந்த தேசியக் கொள்கை தேவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் செல்வாக்கு தவிர்க்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர், இதற்காக நாடாளுமன்றத்தின் ஊடாக மேற்கொள்ள முடியுமான அதிகபட்ச போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

முறையான கணக்கெடுப்பு இல்லாமல் செயற்படுத்தப்பட்டதால் அஸ்வெசும திட்டம் தோல்வியடைந்ததாகவும், இதே முறையை சுகாதாரத்துறைக்கும் பயன்படுத்துவதன் மூலம் சுகாதாரத்துறையையும் அழிக்கும் வேலைத் திட்டத்தில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் இதன்போது குற்றஞ்சாட்டினார்.

தற்போதைய அரசாங்கம், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து இந்நாட்டின் சுகாதாரத்துறையை திட்டமிட்டு அழிக்கும் சதியில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மக்களை மரணப் படுக்கைக்கு இட்டுச் செல்லும் அரசாங்கத்துடன் கைகோர்க்கத் தயாராக இல்லைஎன்றும்எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதன்போது, தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபைசட்டம்மற்றும்இலங்கை மருத்துவ கவுன்சில் சட்டம் தொடர்பாகவும்கலந்துரையாடப்பட்டது. (05)

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் மாணவர் ஆராய்ச்சியாளர் செயற்றிட்டம்

'ஆராய்ச்சி வாரம் - 2023' தொடர்பான கல்வி அமைச்சு சுற்றுநிருபத்துக்கு அமைவாக ஆதாரங்களை அடிப்படை யாகக் கொண்ட தீர்மானங்களை எடுக்கும் கலாசாரம் ஒன்றை பாடசாலை முறைமைக்குள் உருவாக்குவதன் மூலமாக அறிவார்ந்த எதிர்காலமொன்றுக்கு நாட்டின் பாடசாலை சிறார்களை முன்னிலைப் படுத்தும் நோக்கில் கல்வி அமைச்சின் ஆராய்ச்சிமற்றும்அபிவிருத்தி கிளையின்ஊடாகவருடாந்தம் நடைமுறைப்படுத்தப்படும் 'பாடசாலை ஆராய்ச்சி வாரம்' செயற்றிட்டத்தின் 2023 ஆம் ஆண்டுக்குரிய செயற்பாடுகள் கல்முனை மஹ்மூத்மகளிர்கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் அதிபர் யூ.எல்.எம். அமீன், விடே அதிதியாக மஹ்மூத் மகளிர் கல்லூரிபழையமாணவியும் சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபர் எம்.சி. நஸ்லீன் றிப்காஅன்சார்ஆகியோர்கலந்து கொண்டனர். ஆராய்ச்சிகருத் திட்டம் தொடர்பான நிகழ்த்துகைகளைகனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு மாணவிகளினால் ஸ்மார்ட் தொலைக்காட்சி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திமேற்கொள்ளப்பட்டதுடன் எதிர்கால கல்வித் திட்டத்தில் புத்தாக்க நடவடிக்கைகளை மையமாக கொண்ட கல்வி முறையை அறிமுகப்படுத்துவதுடன் ஆராய்ச்சியானதுமுன்னிலை வகிக்கின்றது. ஆராய்ச்சி எனும் தொனிப்பொருளில் சிரேஷ்டபிரிவுமாணவிகளின் விடே நாடகம் ஒன்று அரங்கேற்றப்பட்டதுடன் இந்நாடகம்அனைவருடைய வரவேற்பையும் பெற்றுக் கொண்டது. இந்த நாடக நிகழ்ச்சியை செவ்வனே ஒழுங்குபடுத்திய உதவி அதிபர் என்.டி. நதீகாவின் நெறிப்படுத்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் நிகழ்வில் பிரதம அதிதியாக பங்குபற்றிய கல்லூரியின் அதிபர் யூ.எல்.எம். அமீன் மற்றும் விடே அதிதியாக கலந்து கொண்ட சாய்ந்த மருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகாவித்தியாலயத்தின்அதிபர் எம்.சி.நஸ்லீன்றிப்காஅன்சார் ஆகியோரால் ஆராய்ச்சி தொடர்பாக சிறப்புரையாற்றப்பட்டது.மாணவிகளால் முன்வைக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகளில்இருந்துசிறந்த முறையில் தொகுக்கப்பட்ட முதல் மூன்று இடங்களை பெற்று கொண்ட மாணவிகளுக்கு அவர்களின் திறமைகளைபாராட்டிசான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதி அதிபர் (நிருவாகம்) ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, உதவி அதிபர்களான ஏ.எச். நதீரா, எம்.எஸ். மனுனா, என்.டி. நதீகா,பகுதித்தலைவர்மற்றும் தலைவிகளான ஏ.பீ. றோன்டிப்றாஸ் (தரம்-06), எம்.ஐ. ரஃபீக்கா பீவி (தரம்-07), எம்.ஐ. சாமிலா (தரம்-08), எஸ்.எம். ஜமான் முபினா (தரம்-09) ஏ.ஆர்.எம். நளீம் (தரம்-10), எம்.ஐ. சஃப்ரினா (தரம்-11), எம்.எம்.எம். இஸ்ஸாத்தீன் (தரம் (12ஃ13) உயர்தர தொழில்நுட்பம்), சிரேஷ்ட கனிஷ்ட பிரிவு ஆசிரியர்கள்,அபிவிருத்திஉத்தியோகத்தர்கள் மற்றும் மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# 'பைத்தியக்காரர்கள் பற்றி கவலைகொள்ளவேண்டாம்'

## அரசியல்வாதிகளுக்குத் தேரர் சாட்டை

'அரசியலுக்காகப் பேசும் பைத்தியக்காரர்கள் பற்றிக் கவலைகொள்ள வேண்டாம்' என வடக்கு கிழக்கு மாகாண பிரதம சங்க நாயக்கர் சியம்பலாகஸ்வெள விமலசார நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஸ்ரீ போதி தக்சனாராமய விகாரையில் இடம்பெற்ற குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான ஊடக சந்திப்பில் 'அரசியல்வாதிகள் இன முரண்பாட்டை தூண்டுகின்றனர்' என ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்த கூற்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

'பைத்தியக்காரர்கள் அவ்வாறுதான் பேசுவார்கள். அவர்கள் தொடர்பில் கவலைகொள்ள வேண்டாம். அவ்வாறானவர்கள் இங்கும் உள்ளார்கள் அங்கும் உள்ளார்கள்.

"இவர்கள் தேர்தல் வரும்போது மாத்திரமே இது குறித்துப் பேசுவார்கள். எனவே அந்த பைத்தியக்காரர்கள் குறித்துக் கருத்திற்கொள்ளத் தேவையில்லை' எனத் தெரிவித்துள்ளார். (05)



# பரந்தன் பிரதேசத்தில் வெடிபொருள்கள் மீட்பு

பரந்தனில் வெடிபொருள்கள் மீட்பில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ளனர். குறித்த பகுதியில் உள்ள கிணறொன்றைத் துப்புரவு செய்யும் பொழுது பல்வேறு வகையான வெடி பொருள்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் காணி உரிமையாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதனையடுத்து இதுகுறித்து கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்று குறித்த கிணற்றில் இருந்து வெடி பொருள்களை மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன் போது பல்வேறு வகையான வெடிக்காத வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2023இல் வெளியிடப்பெற்றது.